O.S.No.40/2024
PW1 – சாகிதா பானு
நாள் 24.10.2025

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சம்மன் எதுவும் வரவில்லை. முதல் விசாரணை வாக்குமூலம் என்னிடம் காட்டப்பட்டுள்ளது. அதை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். 1ம் வாதியின் கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவாசொத்தின் விஸ்தீரணம் 1.14 ஏக்கர். தாவா சொத்தின் தற்போதைய நான்குமால்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பழைய நான்குமால்களும் தெரியாது.

2. எனது மாமியார் கிரையம் கொடுப்பதற்கு 15 வருடங்களுக்கு முன்பாகவே 1ம் வாதியின் தகப்பனார் அந்த பகுதியில் கிரையம் பெற்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கும், 1ம் பிரதிவாதியின் சொத்திற்கும் இடையில் உள்ள வரப்பில் வளர்ந்த பனைமரங்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை பார்த்ததில்லை. இந்த தாவா சொத்து சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் கேள்விபட்ட சங்கதிகளின் அடிப்படையில் இருப்பதால் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்றால் சரியல்ல.

3. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது என்ன இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி